# ஆத்மஜோதி



தவத்திரு பூண்டி மகான்

கார்த்திகை 1976

# ஆத்மஜோதி

## ஓர் ஆத்மீக மாதவெளியீடு



எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.

— சுத்தானந்தர்.

ஜோதி 29 — நள ௵ கார்த்திகை ௴ (15-11-76) உ — சுடர் 1

## பொருளடக்கம்

| | | |
|---|---|---|
| பூண்டி மகான் திருவாய் மலர்ந்த பொன் மொழிகள் | — | 1 |
| பூண்டி மகான் | — | 3 |
| ஞாபகம் வைத்துக்கொள் | — | 7 |
| அரியாமையைப் போக்க வழி இது | — | 9 |
| தவயோகி சுவாமி சிதானந்தா | — | 12 |
| நாம் வணங்கும் கடவுளார் | — | 13 |
| ஓங்காரம் | — | 19 |
| நவீன துர்வாசனை நல்வழிப்படுத்தல் | — | 23 |
| கதிர்காம மகிமை | — | 27 |
| ''முருகக் கனி'' | — | 32 |

### ஆத்மஜோதி சந்தா விபரம்

| | | | |
|---|---|---|---|
| இலங்கைக்கு மாத்திரம் வருடச் சந்தா | — | 10-00 | ரூபா |
| வெளிநாடுகளுக்கு ,, ,, | — | 15-00 | ,, |
| ஆயுள் சந்தா ,, | — | 250-00 | ,, |
| தனிப்பிரதி ,, | — | 1-00 | ,, |

ஆசிரியர்: திரு. நா. முத்தையா

ஆத்மஜோதி நிலையம்
நாவலப்பிட்டி. [போன்: 353]

# பூண்டி மகான்
# திருவாய் மலர்ந்த பொன் மொழிகள்

யோகத்தின் முதல் வாசல் பேச்சை அடக்குதலும், உடைமையைத் துறத்தலும் ஆகும்.

* * *

பிரமம் மனதாலே அடையப்பட வேண்டும். பூமியில் நான்கு திக்குகளிலும் சென்றாலும் உண்மையான தருமத்தை ஓரிடத்திலும் காணமாட்டாய். இருப்பதெல்லாம் உன்மனத்திலேயே இருக்கின்றது.

* * *

இறைவன், குரு, அடியாராகிய இவர்களுடைய அருள் இருந்தாலும் கூட இன்னொரு அருள் இல்லையாயின் ஜீவன் நாசம் அடைவான். அந்த முக்கியமான அருள் நமது நெஞ்சினது ஆகும். அதாவது தான் முத்தியடைய வேண்டும் என்ற ஆர்வம் நெஞ்சில் உதிக்க வேண்டும்.

* * *

காற்றினால் மேகங் கூடுகின்றது. மீண்டும் காற்றினாலேயே கலைகிறது. மனத்தால் பந்தங்கள் கற்பிக்கப்படுகின்றன. மனதாலேயே மோட்சமுங் கற்பிக்கப்படுகின்றது.

* * *

எங்ஙனம் பெருகி ஓடும் நதிகள் நாமரூபங்களை இழந்து சமுத்திரத்தில் மறைகின்றனவோ, அங்ஙனம் ஞானி நாமரூபங்களினின்று விடுபட்டு உயர்ந்ததற்கெல்லாம் உயர்ந்த தேஜோமயமான புருஷனை அடைகின்றான்.

* * *

இறைவனுடைய நாமங்கள் அனந்தம். மூர்த்தங்களும் அனந்தம். நீ எந்த நாமரூபத்துடன் அறிய உள்ளன்புடன் விரும்புகின்றாயோ அந்த நாமரூபத்துடன் அவன் உனக்குப் புலப்படுவான்.

* * *

தாமரைப்பூவும் முள்ளிப் பூவும் மலர்வதும், ஒட்டுமாங்கனியும் எட்டிப்பழம் பழுப்பதும் சூரிய வெப்பத்தாலும் ஒளியாலுமே. எனினும் அவற்றின் குண தோஷங்கள் சூரியனைத் தொடா.

யோகிகள் பரமாத்மாவை தங்கள் இருதயத்தில் பூஜிக்கின்றனர். அறிவில் முதிர்ச்சி அடையாதவர்கள் பிம்பங்களில் பூஜிக்கின்றனர். சமதர்சிகள் எங்கும் பூஜிக்கின்றனர்.

சஞ்சலமானதும் நிலையற்றதுமானதும் எந்தெந்தக் காரணத்தைப் பற்றி வெளிப்போந்து திரியுமோ, அந்தந்தக் காரணத்தினின்று இதை மீட்டு அடக்கி ஆத்மாவிலேயே வசமாக வைக்க வேண்டும்.

* * *

நல்லதைச் செய்பவன் எவனும் ஒருபொழுதும் கெட்ட நிலையை அடையமாட்டான் என்பது நிச்சயம். ஞானத்தீ எல்லாக் கருத்தையும் சாம்பலாய்ச் செய்துவிடும்.

* * *

தன்னாலே தன்னை உயர்த்திக்கொள்ள வேண்டும். தன்னைத் தாழ்த்திக் கொள்ளக் கூடாது. தானே தனக்கு உறவினர். தானே தனக்குப் பகைவன்.

* * *

மாம்பழங்களைச் சாப்பிடு. தோட்டத்தில் எத்தனை ஆயிரம் மரங்கள், எத்தனைகோடி இலைகள், என்று கணக்கிடுவதில் பயன் என்ன? ஆசையும் பயமும் கோபமும் இல்லாதவன் எவனோ, அவன் எப்போதும் மலர்ந்த முகத்தானே.

* * *

பாதரசந் தடவின கண்ணாடியில் ஒருவனுடைய முகம் பிரதிபலிக்கும். அதுபோலச் சக்தியையும் தூய்மையையும் பிரமசரியத்தால் காப்பாற்றிக் கொண்டிருக்கிறவனுடைய இருதயத்தில் பரமாத்ம சொரூபம் பிரதிபலிக்கும்.

* * *

பிராணனாலோ அபானனாலோ எவனும் ஜீவித்திருக்கவில்லை. எதை இவ்விரண்டும் ஆதாரமாயுடையதோ அதனால் அதாவது ஆத்மாவால் ஜீவித்திருக்கின்றான்.

* * *

ஆத்மாவிற்கு நாசம் விளைவிக்கும் நரக வாயில்கள் மூன்று. அவை காமம், கோபம், லோபம் என்பன. ஆகையால் இம்மூன்றையுந் தள்ளவேண்டும்.

* * *

பொருள்களை உற்று நினைக்கின்ற மனிதனுக்கு அவற்றினிடம் பற்று உண்டாகிறது. பற்றினின்று ஆசை தோன்றுகிறது. ஆசையினின்று கோபம் பிறக்கிறது. கோபத்தினின்று நன்னினைவு கெடுகின்றது. தன்னினைவு கெட்டதினால் புத்தி நாசம் ஏற்படுகிறது. புத்திநாசத்தால் முற்றும் தானே அழிகின்றான்.

# பூண்டி மகான்

(ஆசிரியர்)

பூண்டி என்பது ஒரு ஊரின் பெயர். இது தென்னிந்தியாவில் சென்னை இராச்சியத்தில் செங்கற்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூர் தாலுக்காவில் இருக்கும் ஊர். இங்குக் கொற்றலை என்று ஒரு ஆறு பாய்கின்றது. ஆற்றின் குறுக்கே அணை ஒன்றைக் கட்டி ஒரு நீர்த்தேக்கத்தை அமைத்துள்ளனர். நீர்த்தேக்கத்தின் முழு அளவு உயரம் 137 அடி. நீர்ப்பரப்பின் அளவு 12½ச. மைல். இத்தேக்கத்திலிருந்து நீர் கொற்றலை வழியாகப் புழலேரிக்குக் கொண்டுசெல்லப்பட்டு சென்னை நகரில் குடிநீராகப் பயன் படுகிறது.

அம்பிகையின் கட்டளைப்படி சுப்பிரமணியப் பெருமான் ஏழு இடங்களில் ஏழு லிங்கங்களைப் பிரதிஷ்டை செய்து பூஜித்தார். அவற்றில் ஒன்று பூண்டி ஆகும். பூண்டியில் ஈஸ்வரன் சிவராத்திரி தினத்தின்போது நரிக்கு மோட்சம் கொடுத்ததாகத் தலபுராணம் கூறுகின்றது. நீர்த்தேக்கம் இருக்கும் இடத்தில் திருவெண்பாக்கம் என்ற பாடல் பெற்ற சைவத்தலம் ஒன்று இருக்கிறது. இவ்வூரின் பெயர் வெண்பாக்கம் ஆயினும் இங்குள்ள கோயிலின் பெயர் வெண்கோயில் என்பதாகும். ''வெண்கோயில் இங்கிருந்தாயோ என்ன'' என்பது சுந்தரர் வாக்கு.

மனிதனுக்கு வாழ்க்கையில் பலவிதமான பிரச்சினைகள் ஏற்படுவது உண்டு. பிரச்சினைகளுக்கு முடிவு காணாமல் திண்டாடும்போது கடைசியில் கடவுளை நினைக்கின்றான். ஆனால் சில மனிதர்கள் எவ்வித முயற்சியும் செய்யாமல் விருப்புவெறுப்பற்றவர்களாய்,

இன்ப துன்பம் இல்லாதவர்களாய் தாங்கள் யார்? கடவுள் என்ருல் என்ன? என்று அறிந்துகொள்வதில் மனத்தை ஞானமுகமாகத் திருப்பி அதில் முயன்று வெற்றியும் அடைகின்ருர்கள். பகவான் ரமண மகரிஷிகளும் பூண்டிமகானும் அத்தகையவர்களே.

பூண்டிமகான் என்பது இவருடைய சொந்த பெயர் அல்ல. பூண்டியில் அமர்ந்ததால் ஏற்பட்டது. ஆற்றுச் சுவாமிகள் என்பதும் இவருக்குரிய ஒரு பெயராகும். இவரை ஆற்றிலே கண்டதால் ஏற்பட்ட பெயராகும் அது. மகான் எந்த ஊர்? - யாருக்குந் தெரியாது. மகானின் சொந்தப் பெயர்?-தெரியவில்லை. மகானின் வயது தாய் தந்தையர் குடும்பம் பற்றியது என்ன? தெரியவில்லை. எந்த மதம்? எந்தச்சாதி? — தெரியவில்லை. ஏன் திண்ணையில் அமர்ந்தார்?— புரியவில்லை. எப்படி பதினெட்டு ஆண்டுகளாக ஒரே இடத்தில் அமர்ந்துள்ளார்?- அது அவரின் மகிமை. அங்கு போடும் மலர் மாலை,பழம், தேங்காய் வருடக்கணக்கில் இருந்தாலும் போட்டது போட்டபடியே உள்ளது ஏன்? - அது தெய்வத்தன்மை. எந்தத் தெய்வத்தை வணங்குகின்ருர்? — தெரியவில்லை. யாருடைய அவதாரம்?—தெரியவில்லை. இவர்யார்?-இவர் ஓர் உயிருள்ள தெய்வம்.

இந்தச் சந்தர்ப்பத்திலேதான் கந்தபுராணச் செய்யுள் ஒன்று நினைவுக்கு வருகின்றது.

ஊரிலான் குணங் குறியிலான் செயலிலான் உரைக்கும்
பேரிலான் ஒரு முன்னிலான் பிறிதோர்
சாரிலான் வரல் போக்கிலான் மேலிலான் தனக்கு
நேரிலான் உயிர்க் கடவுளாய் என்னுளே நின்ருன்.

இயற்கையின் சக்தியாகவும் எல்லா ஜீவர்களையும் இயக்கி அதனுள் பரவியுள்ள அந்தப் பரம்பொருளை உணருவதே ஒவ்வொரு மனிதனின் பிறப்பின் பயனுகும். என்றைக்காவது ஒருநாள் எல்லா ஜீவராசிகளும் தெய்வத்தோடு சேர்ந்தே ஆகவேண்டும். ஆனுல் சிலர் அறிவைக்

கொண்டு விடா முயற்சியால் அதுவரை காத்திராமல் இவ்வுலக வாழ்க்கையை மறந்து முத்தி எய்துகின்றார்கள்.

ஒரு சக்கரவர்த்தியின் இராச்சியத்தில் எங்காவது கலகம் நிகழ்ந்தால் அதனை அடக்குவதற்குச் சக்கரவர்த்தியே நேரில் செல்வதில்லை. தனது பிரதிநிதி ஒருவரையே அனுப்பிவைப்பது வழக்கம். அதுபோல பூமியில் எங்காவது ஒரு இடத்தில் பாவம் மலியுமானால் அதனைப் போக்குவதற்காகப் பகவான் ஒரு அவதார புருஷரையே அனுப்பிவைக்கின்றார். அவதாரம் என்ற சொல்லுக்குக் 'கீழிறங்குதல் என்பது பொருள். பெரிய முக்தர்கள் மக்கள்மேல் கொண்ட கருணையினால் மக்களை ஈடேற்றுவதற்குக் கீழிறங்கி வருகின்றார்கள்.

கடவுள் காலங்கள்தோறும் மகான்களை அனுப்பி அவர்கள் மூலம் உலகத்துக்கு அருளையும், நன்மைகளையும் வழங்குகிறார். தண்ணீரைப் படைத்த இறைவன் தாகத்தையும் உண்டாக்கினான். உணவை உண்டாக்கிய இறைவன் பசியையும் படைத்தான். செடி கொடிகளை வளரவிட்டவன் அவற்றில் மூலிகைகளை வைத்தான். ஆனால் மனிதனைப் படைத்த இறைவனே மனிதனில் தன்னையே இணைத்துக் கொண்டான். அந்த ஜீவாத்துமாவில் உள்ள பரமாத்துமாவை நம்மால் கண்டுகொள்ள முடியவில்லை. அந்தப் பரமாத்துமாவை எமக்கு விளங்கவைப்பவர்கள் மகாத்துமாக்கள். அத்தகைய மகாத்துமாவே பூண்டி மகான். பூண்டியிலே ஆண்டியென அமர்ந்து வேண்டியவர் குறை கேட்டு அவற்றை நீக்கும் அருளாளன்.

பூண்டி மிகமிகச் சிறிய கிராமம்தான். புட்டபர்த்தி யாருக்கும் தெரியாத ஒரு கிராமம். ஸ்ரீ சத்திய சாயிபாபா அவர்களின் அவதாரத்தினால் புட்டபர்த்தி உலகப்பிரசித்தி பெற்ற யாத்திரைத் தலங்களுள் ஒன்றாக மாறியது போல பூண்டியும் உலக மக்களின் யாத்திரைத் தலமாக மாறிவருகின்றது. இதுவே பூண்டி மகானுடைய சந்நிதான விசேடமாகும்.

பூண்டி மகானைத் தரிசிக்க நாள்தோறும் ஆயிரக்கணக்கில் மக்கள் கூடிக்கொண்டே இருக்கின்றார்கள். 20 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு அம்மையாரின் வெளித் திண்ணையிலே அமர்ந்தவர்கள் தான் அமர்ந்தபடியே இருக்கின்றார். கால்கள் நிலத்தில் பரவியதே கிடையாது. அவர் பூமியில் எங்கும் நடக்காமலே, தம்மை நாடி வருவோருக்கு நடக்கப்போவதையும் நடந்ததையும் உணர்த்துகின்றார். சுவாமிகள் சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாகக் குளித்ததே கிடையாது. ஆனால் அங்கு வருவோரின் மும்மல அழுக்குகளை நீக்கித் தூய்மைப்படுத்துகின்றார். எப்பொழுதும் மலம் கழித்ததே இல்லை. இது இயற்கை நியதிக்கு அப்பாற்பட்டதேயாகும். ஆனால் அந்த அண்ணல் இருக்கும் இடத்திற்குச் சென்றால் அங்கு ஜவ்வாது கலந்த நறுமணம் வீசிக்கொண்டே இருக்கும்.

அறிவு என்பது மனிதனுக்குக் கிடைத்த பெரிய செல்வம். இதைப் பயன்படுத்தி மக்கள் முத்திநிலை எய்த வேண்டும். ஆனால் அந்தப் பரப்பிரமத்திடம் அறிவோ, வாக்கோ, கண்களோ, மனமோ சென்றடைய மாட்டா. பொன்பொருள் போன்றவற்றிற்கு அதிபதியான திருமாலினாலும், கல்வி அறிவு, செருக்கு போன்றவற்றிற்கு அதிபதியாகிய பிரமனாலும் அடியையும் முடியையும் காண முடியவில்லை. இதன் தத்துவம் கல்வி கேள்வியினாலும் பொன்பொருள் பலத்தினாலும் இறைவனை அடைய முடியாது என்பதாகும். இவைகளின் உதவியைக்கொண்டு இறைவனை அடையலாம். எப்படியெனில் ஓர் மாடிமேல் ஏறுதற்கு படிக்கட்டுகள் தேவை. படிக்கட்டுகளின் மூலமாக மேல்மாடியை அடையலாம். ஆனால் படிக்கட்டுகள் மாடிமேல் சென்று மாடியைப் பார்ப்பதில்லை. இதன்படி நம் அறிவு என்ற படிக்கட்டின் மூலம் முத்தியாகிய மேல்நிலையை நாம் அடையலாம்.

இந்தமேல் நிலைகளை அறிவிப்பதற்காகவே மதங்களும் மதாசாரியர்களும் குருகுலங்களும் தோன்றின. ஆனால் எல்லா மதங்களும் ஒரே கருத்தைத்தான் கூறுகின்றன. அவைகளின் வழிமுறைகளேதான் வித்தியாசம்.

சமயச்சடங்குகள் யாவும் சாதனைகள் யாவும் கடவுள் உணர்வை மனித உள்ளத்தில் தட்டியெழுப்ப ஏற்பட்டவையே. புலனுணர்வைத் தேய்த்து கடவுள் உணர்வை தூண்டவேண்டும். இத்தகைய உணர்வை மகான்களுடைய சந்நிதியிலே மிக இலகுவாகப்பெற்றுவிடலாம். இதனையே தான்பூண்டி மகானுடைய திருச்சந்நிதி செய்துவருகின்றது.

# ஞாபகம் வைத்துக்கொள்

(கீதா - தைனந்தினீயிலிருந்து)

தமிழாக்கம்: ஸ்ரீ K. R. சுப்ரமண்யம் M. A.,
விரிவுரையாளர்:
ஹிந்தி மஹா வித்தியாலயம்—ஹைதராபாத்—44;

1. பகவானை அடைவதும், அவருடைய அருளைப் பெறுவது என்பதும் ஒவ்வொருவருடைய விருப்பத்தை ஒட்டி உள்ளது. ஆனால், உலக விஷயங்களில் சுகத்தை அடைவது என்பது ஒவ்வொருவர் செய்துள்ள பூர்வ கர்மாக்களை ஒட்டியுள்ளது. நினைத்துவிட்டால் மட்டும் கிடைக்காது.

2. பகவானை அடைந்து, அவர் அருளைப்பெற்ற பிறகு அவரிடமிருந்து பிரிவு என்பது கிடையாது. (கீதை: 8-16); ஆனால், விஷய சுகங்கள் சிறிது காலம் அனுபவிக்கப்பட்ட பிறகு அவைகளிடமிருந்து பிரியாமல் இருக்க முடியாது.

3. பகவானை அடைவது என்பதும், அவர் கிருபையைப் பெறுவது என்பதும் எப்பொழுது ஏற்படுகிறதோ, அப்பொழுது அந்தக் காரியம் பூர்த்தியை அடைகிறது. ஆனால், எவ்வளவு விஷய சுகங்களை மனிதன் பெற்று அனுபவித்தாலும், அவை பூர்த்தி அடைவதில்லை. மேலும் அவைகளின் பற்றுதல் அதிகமாகி ஆசையை வளர்க்கிறது.

4. பகவானை அடையவேண்டும், அவர் அருளைப் பெறவேண்டுமென்ற எண்ணம் மனதில் தோன்றிய நிமிஷமே பாபங்களெல்லாம் தானாகவே விலகிவிடுகின்றன. ஆனால், விஷய சுகங்களைப் பெற்று அனுபவிக்க வேண்டுமென்ற எண்ணம் மனதில் தோன்றிய க்ஷணத்திலேயே பலவித பாபச் செயல்களை செய்ய முடிவு கொண்டு, பாபங்கள் ஏற்படுகின்றன.

5. பகவானை அடையவோ, அவரருளைப் பெறவோ மனிதன் செய்யும் முயற்சிகளினால் அவனுக்கு மன அமைதியே கிடைக்கிறது. விஷய சுகங்களைப் பெற மனிதன் செய்யும் ஒவ்வொரு பிரயத்தனத்திலும் அவனுக்கு மன அமைதி அழிந்து, அமைதியின்மையே விளைகிறது.

6. பகவானை நினைத்துக் கொண்டு மரிக்கும் ஜீவன் சுகமாகவும், சாந்தியுடனும் மரிக்கிறான். விஷய சுகங்களையும், சொத்து சுதந்தரங்களையும் நினைத்துக் கொண்டு மரிப்பவன் அமைதியின்றி வருத்தப்பட்டுக் கொண்டு, தன் உயிரை விடுகிறான்.

7. பகவானை நினைத்துக் கொண்டு மரிக்கும் ஜீவன் சந்தேகமின்றி பகவானுடைய ஆனந்த நிலையான, அடிநிழலையே அடைகிறான். (கீதை 8-13): ஆனால், விஷயங்களை நினைத்துக் கொண்டு உயிரை விடுபவன் சந்தேகமின்றி துக்கம் நிறைந்த நரகத்தையே அடைகிறான் கீதை.(16-16).

---

## பஞ்ச தந்திரம்

நிறைவுற்ற மனம் உடையவன் எல்லாச் சம்பத்துக்களையும் அடைந்தவனாவான். ஆம், செருப்பு போட்டிருப்பவனுக்குப் பூமி முழுவதும் தோல் கொண்டு மூடியதாக இருக்கும் அல்லவா?

யாகத்தில் பசுக்களை வதைப்பவர்கள், அந்தகாரத்திலே மூழ்கிக்கிடப்பவர்கள்! அகிம்சையைக் காட்டிலும் உயர்ந்த தர்மம் இருந்ததும் இல்லை; இருக்கப்போவதும் இல்லை!

மன்னர், மங்கையர், படருங்கொடி ஆகிய மூவரும் பக்கத்தில் இருப்பவரையே தழுவிக்கொள்வர்; பக்கத்தில் இருப்பவன் — முட்டாளாகவோ— கீழ்த்தரத்தவனாகவோ, வேற்று மனிதனாகவோ — எப்படி இருந்தாலும் அவனையே அரசன் ஆதரிப்பான்.

பீதியடைந்தவனையோ, நெருக்கியடிக்கப்பட்டவனையோ, புறமுதுகிட்டு ஓடுகிறவனையோ, மற்றவர்களால் கைவிடப்பட்டவனையோ, நிராயுதபாணியையோ, தனியாக இருப்பவனையோ அவமானம் செய்யலாகாது என்று அறநூல் விற்பன்னர்கள் கூறுவர்.

# அறியாமையைப்போக்க வழி இது

—திரு. T. M. S. மரிக்கார்பாவா—

## பயம், அச்சம், பகைமை கொடியது!

சூரியனை மேகம் மறைப்பதுபோல் உங்கள் அறியாமை ஐயப்பாடுகள் அறிவின் விளக்கத்தை மறைக்கின்றன. வெளிச்சத்தை சுவர் தடுத்துக்கொள்வதுபோல் மக்களுடைய அறிவின் விளக்கத்தை பகைமை தடுத்துக்கொள்கிறது. தன்னைத் தானேயடக்கிப்பழகியவனைப் புறத்திலுள்ள ஒரு பொருளும் பந்தியாது. அவனுக்கு அடிமைத் தன்மையில்லை. அவனுடைய மனம் பந்தமின்மையாகிய நிலையையடைந்து விட்டதாதலினால், அவன் உலகத்தாற் றுக்கப்படாது சீவிக்கத் தகுதியானவன் சாதாரணமாக மனிதர் உலகத்தைப் பற்றி இரு வேறு வகைப்பட்ட கொள்கையையுடையவர்.

அளவிறந்த துன்பமும் தீமையும் நிறைந்த இடம் உலகம் என்று ஒருசாரார் சொல்லுவார். மற்றொருசாரார் இவ்வுலகம் தீயதாக அல்லது தீமையும் நன்மையும் கலந்ததாகத் தோற்றும்; நாம் நம்முடைய மனதுக்கு எஜமானர்களான பின்பு, இவ்வுலகம் அழகியதாகத் தோற்றும். அப்பொழுது நமக்கு நன்மையுந் தீமையும் நேரிடா; எப்பொருளுந் தமக்குரிய விடத்திலே பொருத்தமாகவும் இயைபாகவுமிருப்பதாகத் தோற்றும். ஆரம்பத்தில் உலகம் நரகம் என்று சொன்னோமாயினும், பூரணத் தன்னடக்கம் பெற்ற பின்னர் இவ்வுலகமே தேவலோகமென்று சொல்லுவோம். நாம் பூரணத்துவத்தையடைய விரும்பி உண்மையான கருமயோக மார்க்கத்தை யப்பியசித்துவருவோமாயின், ஆரம்பத்தில் எவ்வண்ணமிருப்பினும் ஈற்றில் முற்றான தன்னல மறுப்பினையடைவோம்.

மயக்கத்தைத் தரும் அகங்காரங் கழிந்த பின்பு, தீமை நிறைந்திருப்பதாகத் தோற்றிய உலகம் எல்லா வகையான தீமைகளும் நிறைந்த தேவலோகமாகும். சூழவிருக்கும் ஆகாயந்தானும், பரிசுத்தமானதாகத் தோற்றும்; மனிதரனைவரும் நல்லவர்களாகத் தோற்றுவார்கள்; கருமமார்க்கத்தின் இலக்கும் முடிவும் இதுவேயாகும்; அம்மார்க்கத்தினுல் சீவியத்திலடைகிற பூரணத்துவம் இத்தன்மையதே. பலவாகிய யோக மார்க்கங்கள் ஒன்றேடொன்று முரணுவதில்லை. அவையாவும் ஒரே முடிவினையுடையன. அனுகூலமடைய விரும்பினுல் விடா முயற்சியான அப்பியாசம் வேண்டும்.

உண்மை நெறியைக் கேட்டு சிந்தித்து, அப்பியசிக்க வேண்டும் என்று உபநிடதங் கூறுகிறது. ஏனைய யோகங்களுக்கும் இது பொருந்தும். முதலில் உண்மைப் பொருளைக் கேட்க வேண்டும். அதன் பின்னர் பொருளையுணர வேண்டும். ஆரம்பத்தில் விளங்காதனவும் பல முறை கேட்டுச் சிந்திப்பதனுற் றெளிவாகும். அனைத்துப் பொருளின் விளக்கமும் நம்முள்ளே அமைந்திருக்கிறது. ஒவ்வொருவனும் தனக்குத்தானே பாடஞ் சொல்லி வைக்க வேண்டும். புறத்தேயுள்ள ஆசிரியன் முயன்று விஷயங்களை விளக்கமாக்கிருன். நம்முடைய காட்சியினுலும் எண்ணத்தினுலுமே எல்லாந் தெளிவாகின்றன; பின்னர் அவை சக்தியுண்டாகிறது.

முதலில் உணர்ச்சி வேண்டும்; இவ்வுணர்ச்சியே சித்த சக்தியாய், நாடி நரம்பு தசை யெங்குஞ் செறிந்து நிற்கும் மேலான வலிமையாக மாறுபட்டு, உடலைச் சுயநல விருப்பற்ற முயற்சி செய்யும்.

புத்தகத்தைப் பார்க்கப் பார்க்க
புத்தி கோணுமே
சுத்த அறிவோடு இருக்க
சோதி தோணுமே.

அறிவை அறிந்தோன் ஆயிரத்தில் ஒருவன்
குருவை அறிந்தோன் கோடியில் ஒருவன்
கருவை அறிந்தோனை காண்பது அரிது.
கற்றோர் கண்ணுடையார்
கல்லாதவர் புண்ணுடையீர், அன்புடையீர்,
கற்றது கையளவு கல்லாதது கடல் அளவு
பற்றற்ற பொருளில் பற்று அற்ற துணிவாயின்
பற்றற்று வாழ்வதே முத்திநிலை
நடப்பதெல்லாம் பெரும் நன்மைக்கே.

என் அன்புள்ள இருதய மலரே

என்னுடைய பிரார்த்தனை

நாங்கள் யாவரும் சாதி, சமய பேதமற்று, சாந்தி சமாதானம் நேர்மை, அன்பு, பொறுமை, உண்மை, ஆத்மிக உணர்வோடு வாழப் பழக வேண்டும்.

---

# பஞ்சதந்திரம்

எதிரியினுடையவும் தன்னுடையவும் பலத்தை விசாரித்துக் கொள்ளாமல் காரியத்தில் முனைந்தால், அவன் தனக்கே அழிவைத் தேடிக் கொள்கிறான்.

அறம் ஒன்றுதான் நம்மை மறுவுலகிலும் நண்பனாகத் தொடர்ந்து வருகிறது. மற்றவை எல்லாம் சரீரத்தோடு நாசமாகி விடுகின்றன!

அறத்தை அழித்தால் அது திருப்பி அழித்துவிடும்; அறத்தைக் காப்பாற்றினால் அது திருப்பிக் காப்பாற்றும்.

'நெறிமுறையிலிருந்து தவறுகிறவன், சொந்தக்காரனோ, நண்பனோ அரசனோ அல்லது ஆசாரியனோ யாராயினும், அவ்விதம் செய்வதைத் தடுக்க வேண்டும். அவ்விதம் தடுக்க முடியாவிட்டால், அப்பால் அவன் தன் இஷ்டப்படி செய்து கொள்ளலாம்' என்று கூறலாமா?

யாருக்குக் கெடுதி நேர்வதை விரும்பவில்லையோ, அவரிடம் வலுவிலே போய் கெடுதிவரவிருப்பதை ஒருவன் சொல்ல வேண்டும். அதுதான் நல்லவர்களுடைய தர்மம். மற்றவர்கள் அதற்கு விபரீதமானவர்கள்.

எதிரிடையாக முடிந்த விஷயத்தை மறுபடியும் கிளப்பிவிடுதல், பின்னால் வரக்கூடிய ஒரு நன்மையை முன்னதாக அடைய முயலுதல், விபரீதமாக முடியக் கூடியதைத் தடுத்தல், ஆகியவற்றுக்கான யோசனைகளைத் தெரிவிப்பதே சிறந்த அறிவுரை.

# தவயோகி சுவாமி சிதானந்தா

– சுவாமி நிர்மலானந்தா –

*''நல்லாரைக் காண்பதுவும் நன்றே, நலமிக்க
நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே''*

என்ற ஔவைப் பிராட்டியின் முதுமொழிக்கிணங்க, ஞானிகளும், யோகிகளும், மகான்களும் நிறைந்த நம் பாரதத்தில் மகான்களுடைய திவ்யதிருஷ்டியினல் தீயோரும் நல்லோராகி விடுகின்றனர். அத்தகைய மகான்களில், இமயஜோதி சத்குரு சிவானந்த மஹராஜினுடைய பரிபூர்ண கிருபைக்குப் பாத்திரமான சுவாமி சிதானந்த மஹராஜ் இன்று வாழும் மகான்களில் ஓர் ஒப்புயர்வற்ற ஞானியாகும். அவருடைய குண நலன்களை அவரை தரிசித்தவர்கள் அறிவார்கள். அவருடைய அன்பு, கருணை ஜீவதயாவை சிறு புழு முதல் கொடிய விஷத்தேள் வரை அனுபவிக்கின்றன. புழுவாயினும் யார் காலிலாவது பட்டுவிடப் போகிறதே என்று அதை எடுத்து தூரத்திலிடுவார். அப்படியே தேளையும் பிடித்து ஜனநாட்டமில்லாத இடத்தில் விட்டுவிடுவார். சர்வஜீவனிலும் ஈசுவரனைக் காண்பதால்தான் இத்தகைய பரிவு அவருக்கு ஏற்படுகிறது.

துன்பங்களுடன் அவரை நாடுவோர் தங்கள் துன்பங்கள் ஆதவனைக்கண்ட பனிபோல் விலகுவதை அனுபவிக்கின்றனர். திருமணமாகாத ஒரு பெண் அவரைக் கண்டு வேண்டியதில், அவரருளால் உடன் ஒரு மாதத்திற்குள் திருமணம் நிறைவேறி மகிழ்ச்சியடைந்தாள். மற்ெருரு நிகழ்ச்சி—மருத்துவக் கல்லூரி மாணவிகள் நால்வர் அவரைக்கண்டபோது அவர், நீங்கள் அறையில் ஸ்நானம் செய்தால் போதும், கங்கைக்குச் செல்ல வேண்டாம் என்ற போதிலும், அவர்கள் கங்கை சென்றதில் ஒரு மாணவி மரித்தது மிகச் சோகமான நிகழ்ச்சி. முதலிலேயே ஞானதிருஷ்டியில் அவருக்குத் தெரிந்ததோ! கடவுளேயறிவார். இதுபோன்ற நிகழ்ச்சிகள் பலப்பல நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றன.

அவருடைய பெருமையை விவரிக்க இச் சிறிய கட்டுரை போதாது. என் சிற்றறிவுக்கும் இயலாது. அவருடைய ஷஷ்டியப்தபூர்த்தி-மணிவிழா மலருக்கு என் காணிக்கையாக இச்சிறு கட்டுரையைச் சமர்ப்பிக்கின்றேன். அவர் பல்லாண்டு,பல்லாண்டு பலகோடி நூறுண்டு வாழ்ந்து அகில உலகிலும் அருட்குருநாதரின் புகழைப் பரவச்செய்து ஆன்மீக அருள்விளக்காகத் திகழ இறைவனை இறைஞ்சுகின்றேன். ஓம் சாந்தி!

# நாம் வணங்கும் கடவுளார்

— (முத்து) —

தத்துவங்களைக் கடந்து நின்றவர் கடவுள். மனமொழி மெய்களைக் கடந்தவர் கடவுள். தியான மூலம் உள்ளத்தைத் தேய்த்து அழித்தால் ஒளிருவது ஆத்மா. உடலுக்குள்ளே ஆத்மா இருப்பது போல ஆத்மாவுக்குள்ளே இருப்பது பரமாத்மா. இதனையே உயிருக்குள் உயிராய் நின்றவன் என்று குறிப்பிடுகின்ருர்.

இறைவன் படைப்பாகிய உலகப் பொருள்களில் எல்லாம் ஆண்டவனைக் காணுதல் ஒருவகை. உள்ளத்தினுள்ளே இறைவனைக் கண்டு கொண்டிருத்தல் இன்னெரு வகை. உள்ளத்தினுள்ளே நான் கண்ட கடவுளையே உலகமெல்லாம் காணுதல் பிறிதொரு வகை. யார் சிவபக்தர்களோ அவர்களை நாம் வணங்க வேண்டும். இறைவனுக்கும் இறைவனுடைய அடியார்களுக்கும் வேற்றுமை இல்லை. சாதி மதம்; உயர்வு தாழ்வு; இவை சமரச ஞானிகளிடத்து இல்லை. ஆதிபரம்பொருட்கும் இவ்வேற்றுமை கிடையாது. அவனுடைய அடியவர்களிடத்தும் இவ்வேற்றுமைகள் காணப்படுவது இல்லை.

செல்வத்திற்குத் தலைவன் குபேரன். குபேரன் சிவபெருமானுடைய தோழனுக விளங்கியவன். குபேரனிடத்துக் காணப்படும் நிதியைச் சங்கநிதி, பதுமநிதி என வழங்குவர். சங்கு வடிவாகக் குவிக்கப்பட்ட நிதி சங்கநிதி. பதுமம் என்ருல் தாமரை. தாமரை வடிவாகக் குவிக்கப்பட்ட நிதி பதுமநிதி. கோடிவரை நாம் இலக்கங்கள் எண்ணுவோம். கோடிக்கு மேலும் பத்துக் கோடி, நூறு கோடி, ஆயிரங் கோடி என வளர்ந்து செல்லும். அதற்கு மேலும் எண்கள் வெள்ளம், சங்கம் என்னும் பெயர்களாலும் அழைக்கப் பெறும். சங்கம் என்ற பேரெண்ணைக் குறிப்பது சங்கநிதி

என்றும், பதுமம் என்ற பேரெண்ணைக் குறிப்பது பதுமநிதி என்றும் கூறுவர்.

சங்கநிதி பதுமநிதியிலிருந்து எவ்வளவை எடுத்தாலும் அவை குறைவடைவதில்லை. எடுத்த அளவுக்குத் தானே நிரம்பித் தன்னைப் பூரணப்படுத்திக் கொள்ளும் தெய்வத் தன்மை உடையவை. இதனால்தான் சங்கநிதி பதுமநிதி போன்ற செல்வங்களும் கற்பகதருபோன்ற விருட்சங்களும் காமதேனு போன்ற பசுக்களும் அடிக்கடி புராணங்களி லும், இலக்கியங்களிலும் எடுத்தாண்டுள்ளார்கள்.

இத்தகைய தேவர் உலகச் செல்வங்களும் பூமி முழு வதையுமே ஆளும் ஆட்சியும் என்றும் நிலையற்றவையாகும். அருட்செல்வம் ஒன்றே செல்வங்கள் எல்லாவற்றினும் மிக உயர்வுடைய செல்வமாகும். மற்றைய செல்வங்களும் ஓரளவு நிலைத்து நின்று பலனைக் கொடுக்க வேண்டுமானால் திருவருளின் துணை வேண்டுவதவசியமாகும். சிவபெருமா னிடத்து அன்புள்ளவர் எல்லாரும் சிவனடியார்கள் ஆவர்.

அவர்களுக்குள் பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லை. திருக்குலத்தில் உதித்த நந்தனார் இறைவழிபாட்டில் உயர்ந்து நின்றாராதலின் அவர் தில்லை மூவாயிரவரினும் உயர்வுடையவராகக் கருதப்பட்டார். திருஞானசம்பந்தப் பெருமானுடைய திருமுறைப் பாடல்களுக்கு யாழ்வாசித் துப் பேறுபெற்ற திருநீலகண்ட யாழ்ப்பாணர் சம்பந்தப் பெருமானுடைய இல்லத்திலேயாக வேதிகைக்குப் பக்கத் திலேயே துயிலும் பாக்கியத்தைப் பெற்றார்.

சிவபெருமானுடைய திருவடியை நோக்கி யாத்திரை செய்வோர் அத்தனை பேரும் திருவடி யாத்திரைக்காரரே. சிவன் அடியைச் சிந்திப்பவர் சிவனடியார். சிவனடியை நோக்கி யாத்திரை செய்பவர் திருவடியாத்திரைக்காரர். "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம் உடை யோர் அத்தனை பேரும் சிவனடியார் என்ற ஒரு பெயருள் அடங்கியவரே.

நோய்களுள் கொடியது தொழு நோய் என்று சொல்லப்படும் குட்ட நோயாகும். இதனைக் கர்மநோய் என்றே சொல்லுவர். இந்நோய் வாய்ப்பட்டார் கை கால்களும் விரல்களும் அழுகி அழுகி விழுந்துகொண்டே இருக்கும். இத்தகைய நோயாளனாயினும் சிவனுடைய அடியவனாயின் அவன் வணங்கத் தக்கவனாகும்.

புலால் உண்பவர் எல்லாரும் புலையரே. அவருள்ளும் பசுவதை செய்வோர் கொடிய புலையர் ஆவர். பசுவின் உடலில் தேவர்கள் வசிப்பதாகப் புராணங்கள் கூறுகின்றன. பசு நமக்குத் தாய்போலப் பால் உதவுகின்றது. கமத்தொழிலுக்கு உரமாகச் சாணி உதவுகின்றது. இறைவனுக்கு அபிஷேகம் செய்ய பஞ்ச கௌவியம் உதவுகின்றது. தேவருலகிற்குக் காமதேனு எப்படியோ, நமக்குப் பசு அப்படியாகும். நாம் வளர்த்து வரும் பசுவிற்கு நாம் அளிக்கும் உணவு மிகமிகச் சாமானியமானதாகும். பசு கொடுப்பதோ மிக உயர்ந்ததாகும்.

எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களிலே தோன்றிய எல்லாப் பிராணிகளும் உணவு உண்ணுகின்றன. அவை உண்டு வெளியே வந்தால் மலம் என்று பெயர். ஒரு பிராணி மட்டும் உண்டு கழித்தது மலம் என்று சொல்லப்படுவதில்லை. அது புனிதமானது. எது? பசுவின் சாணம். பூசை செய்யும் புனித வீட்டை அதைக் கொண்டு மெழுகிப் பரிசுத்தம் ஆக்குகின்றோம்.

திருநீறு பசுவின் மலத்தால் ஆனது. எமது மும்மலங்களையும் சுட்டெரிக்கவல்லது திருநீறு. நமது குழந்தைகள் வெளிக்குப் போனால் பசுச்சாணம் போட்டு மெழுகி அந்த இடத்தைச் சுத்தம் செய்கிறோம். ஆகையினால் பிற மலங்களைப் போக்க உதவுவது பசுவின் சாணமாகும். நச்சுப் பூச்சிகளை எல்லாம் கொல்லத்தக்க சக்தி சாணத்திலுண்டு. ஆனபடியினால் முற்றத்திற்குச் சாணி தெளிக்கிறோம்.

இத்தகைய பசுவைக் கொல்லுதலும் அதன் இறைச்சியைப் புசித்தலும் பாதகங்கள் எல்லாவற்றிலும் மாபாதகம் ஆகும். என்றாலும் அப்பாதகன் தானும் சிவபக்தனுயின் அவன் வணங்கத்தக்கவனுகின்றான்.

நிலையான பக்திச் செல்வம் பெருது, நிலையற்ற உலகம் அனைத்தையும் பெற்றாலும், அவ்வுலகச் செல்வத்தை ஒரு பொருளாக நினைக்கமாட்டோம் என்கிறார் நாவுக்கரசர்.

''சங்கநிதி பதுமநிதி இரண்டுந் தந்து
தரணியொடு வானாளத் தருவ ரேனும்
மங்குவார் அவர்செல்வம் மதிப்போம் அல்லோம்
மாதேவர்க் கேகாந்த ரல்ல ராகில்
அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்
கங்கைவார் சடைக்கரந்தார்க் கன்ப ராகில்
அவர் கண்டீர் நாம்வணங்கும் கடவுளாரே.''

''ஆன்மாவை மட்டும் இழந்துவிட்டு உலகம் முழுவதையும் பெற்றாலும் அதன் பயன் என்ன?'' என்பது இயேசுநாதர் வாக்கு. பக்தி இருந்தால் இழிந்த பிறப்பினரும் வணங்குதற்குரியவராவர். தேவரோடு வைத்து வழிபடப்படும் பசுவைக் கொல்லுதலாகிய தொழிலினும் தீய தொழில் பிறிதொன்று இல்லை. அது செய்தாரைப் புலையர் என்று அழைத்தனர். இவர்களைச் சண்டாளர் என்று கூறுவர்.

''இறைவன் தன்னிடத்து உண்மை அன்பு உண்டாகப் பெற்றாரிடத்து பிறப்பின் சார்பால் உளவாகி, பல்வேறாகிய காரணங்களால் அகற்றப்படாது நிற்குங் குற்றங்களை நோக்கி அவரைக் கடிந்தொழியாது, அவர்தம் அன்பு ஒன்றையே நோக்கி அவரை உகந்தருளுவன் என்பதும், பிறப்பு முதலியவற்றால் உயர்ந்தோரும் அவரை வணங்கற் பாலர் என்பது இறைவன் திருவுள்ளமாதலும் கண்ணப்ப நாயனாரது வரலாற்றால் இனிது விளங்கிக்கிடத்தலின்

''புலையரேனும் கங்கைவார் சடைக் கரந்தார்க்கு அன்பராகில், அவர் கண்டீர் யாம் வணங்கும் கடவுளார்'' என்று அருளிச் செய்தார். இதனாலேயே சிவனடியாரை அவர்தம் பிறப்பு முதலிய நோக்கி இகழக்கூடாது என்பது துணிபு.

இறைவனிடத்து எத்துணைச் சிறந்த அன்பும் தொண்டும் உடையராயினும், இலராயினும் அவரை அவர்தம் பிறப்பு, தொழில் முதலியவற்றின் உயர்வு தாழ்வுகட்கேற்பக் கொள்ளுதல் உலகியல் என்பதும், பிறப்பு, தொழில் முதலியவற்றால் எத்துணை உயர்வு தாழ்வுகள் உடையாராயினும், அவரை அவர்க்கு இறைவனிடத்துள்ள அன்பு, தொண்டு என்னும் இவற்றின் நிலைகட்கு ஏற்பக்கொள்ளுதல் மெய்ந்நெறி என்பதும் இத்திருத்தாண்டகத்தால் இனிது விளங்கக் கிடக்கின்றன.

இம்மெய்ந்நெறிமுறைமை 'சண்டாளனாய் இருப்பினும் 'சிவ' என்று சொல்வானேல், ஒருவர் அவனோடு பேசுக; அவனோடு வசிக்க; அவனோடு இருந்து உண்க என உபநிடதத்தினும் கூறப்பட்டமை காண்க. பிரமசூத்திரம் நான்காம் அத்தியாயம் முதற்பாதம் பன்னிரண்டாம் அதிகரணத்துள் நீலகண்ட பாடியத்துக் காட்டப்பட்டது. மாதவச் சிவஞானயோகிகளே தமது கலைசைப்பதிற்றுப் பத்தந்தாதியில் பின்வருமாறு கூறுகின்றார்.

''சிவனெனும் மொழியைக் கொடிய சண்டாளன்
செப்பிடின் அவனுடன் உறைக!
அவனொடு கலந்து பேசுக அவனோடு
அருகிருந்துண்ணுக என்னும்
உவமையில் சுருதிப் பொருள்தனை நம்பா
ஊமரோடுடன் பயில் கொடியோன்
இவனெனக் கழித்தால் ஐயனே கதிவே
றெனக் கிலை கலைசையாண்டகையே''

இங்கு சண்டாளன் என்றது, ஜன்ம சண்டாளனை அன்று; கன்ம சண்டாளனையே, அதாவது பிறப்பில் சண்டாளர்

இனத்திற் பிறந்தவனே அன்று; உயர்ந்த வருணத்திற் பிறந்து, தனது சாதி தருமத்தில் வழுவினமையால் சண்டாளத்துவம் எய்தியவனேயே, மீளவும் தம் உலகியல் முறைமையினையே நிலைநிறுத்த முயல்வர் சிலர், இக்கருத்தினை உபநிடதம் வெளிப்படக் கூறாது சொல்லினும் அதனை விளக்கவே புகுந்த சிவஞானயோகிகளுடைய கருத்தையும் ஆழ்ந்து சிந்திப்போமாக. திருவரங்கக் கலம்பகத்தில் வரும் பின்வரும் பாடல் உள்ளத்திற்கு நல்ல விருந்தாகும்.

பாதியாய் அழுகிய கால் கையரேனும்
பழிதொழிலும் இழிகுலமும் படைத்தோரேனும்
ஆதியாய் அரவணையாய் என்பாராகில்
அவரன்றேயாம் வணங்கும் அடிகளாவார்,
சாதியால் ஒழுக்கத்தால் மிக்கோரேனும்
சதுர்மறையால் வேள்வியால் தக்கோரேனும்
போதினன் முகன்பணியப் பள்ளி கொள்வான்
பொன்னரங்கம் போற்றுதார் புலையர்தாமே.

---

# பஞ்சதந்திரம்

சிற்றோடை சீக்கிரம் நிறைந்துவிடும்; எலியின் சேரங்கையும் கொஞ்ச தானியங்களால் நிரம்பும். அற்பன் எளிதில் சந்தோஷம் அடைவான்: சொற்பம் கிடைத்தால் அவன் திருப்தி கொள்வான்.

நல்லவர்கள் வித்துவான்களையும் சாதுக்களையும் பூஜிப்பதில் அதிசயம் என்ன இருக்கிறது? இழிகுலத்தில் பிறந்தவன் அவ்விதம் செய்வதே அதிசயம், சூரியமண்டலத்தில் குளிர்ச்சி தோன்றுவதுபோல் அது அற்புதம் ஆகும்!

கானகத்தில் வாசம் செய்தாலும் ஆசையுள்ளவர்களை அந்த ஆசையே அடிமைப்படுத்துகிறது. வீட்டிலே இருந்தாலும், ஐம்புலன்களையும் அடக்குவதே தபசு. ஆசையைத் துறந்து, தலை குனியத்தக்க காரியம் எதையும் செய்யாதவனுக்கு அவன் வீடே தபோவனம்.

இவ்வுலகத்தில் தானத்தைப் போன்ற செல்வம் வேறு இல்லை; திருப்தியைப் போன்ற சுகம் வேறு இல்லை; ஒழுக்கம் போன்ற ஆபரணம் வேறு இல்லை; ஆரோக்கியத்தைப் போன்ற லாபம் வேறு இல்லை!

# ஓங்காரம்

*********************************

(கங்காதரன்—புதுவை)

ஓங்காரம் என்னும் அமரத்துவம் அளிக்கும் அருள்நாத மானது வெறும் யூகமோ நம்பிக்கையோ பண்படாத மனத்தின் கற்பனையோ சாஸ்திரங்களிலும் மாமறைகளிலுமுள்ள வெறும் சொல்லோ எழுத்தோ அன்று.

நாம் புலனறிவால் அறியக்கூடிய ஸ்தூலப்பொருள்களை விட இன்னும் ஸ்தூலமாகவும் தெளிவாகவும் மனங்கடந்த உள்ளாழ்ந்த மோனப் பெருநிலையில் உருவாகும் அருட் புலன்களின்மூலம் பிரத்தியட்சமாகக் காணவும் தெளிவாகக் கேட்கவும் சிறிதும் ஐயத்திற்கிடமின்றி உணரவும்கூடிய அனுபவப்பொருளாகும்.

* * *

ஓங்காரமென்றும் நாதப் பிரம்மமென்றும் பரி ஒலி என்றும் மறைகள் போற்றும் அமரநாதமானது அல்லும் பகலும் அனவரதமும் எல்லா விடயங்களிலும் இடைவிடாது ஒலித்துக் கொண்டே இருக்கின்றது. உள்ளாழ்ந்த மோனத்தில் அதை உணர்ந்த மாமுனிவன் பிறவித் தளையினின்றும் விடுபட்டு மீண்டும் பிறவாப் பெருநிலையடைந்து அமரானந்தத்தில் திளைக்கிறான்.

* * *

சூரியனுக்கு ஒளியும் நீருக்குத் தண்மையும் காற்றுக்கு அசைவும் இயல்பாக உள்ளதே போன்று பரம்பொருளுக்கு ஓங்காரநாதம் இயல்பான தன்மையாகும். மலரும் மணமும் போல பரம்பொருளும் ஓங்காரமும் பிரிக்கமுடியாதபடி பிணைக்கப்பட்டுள்ளன.

பரம்பொருளை தரிசிக்கும்போது பரசாந்தம் பரமோனம் பரநாதம் பரஞ்சுடர் பரமானந்தம் ஆகிய அதன் அருட்குணங்களை இயல்பாக உணருகிறோம்.

வேதங்கள் அருளுவதனுலேயே ஓங்கார நாதம் இருக்கிறதென்பது சரியன்று, ஓங்கார நாதம் உள்ளதனுலேயே அதை உணர்ந்த மகரிஷிகள் உலகம் உய்ய வேதங்களின் மூலம் அருளிச் சென்றுள்ளனர் என்பதுவே பரிபூரணத்துவமுடைய உண்மையாகும். வேதங்களும் இவ்விஸ்வப் பிரபஞ்சமும் அதன் இயக்கங்களும் தோன்றுவதற்கு பல கோடியுகங்களுக்கு முன்பே பரம்பொருளும் ஓங்கார நாதமும் இருந்தது. இன்றும் இருக்கின்றது; மகாபிரளயங்களுக்கு; ஊழிகளுக்கும் முடிவில் ஒன்றுமில்லா பாழ் வெளியொன்றே மிஞ்சிநிற்கும் போதும் அது நிரந்தரியாக இருந்துகொண்டிருக்கும்.

இது வெறும் யூகமன்று. ஆர்வமும் நம்பிக்கையும் கீர்த்தியும், இறையருளுமுடைய அதிதீவிர சக்தியத்தேட்டகர்களாகிய மெய்யன்பர்கள் அதை இப்பிறவியிலேயே அனுபவவாயிலாக உணர்ந்து அழியாத அமரத்வ நிலையை அடைவர்.

* * *

மொட்டு வளர்ந்து மலர்ந்து விரியும்போது அதில் உருவம் எழில்மணம் நிறம் யாவும் இயல்பாகத் தோன்றுவதே போன்று நம் அகக்கரணங்களும் புறக்கரணங்களும் புலன்களும் மனதும் தூய்மையும் அமைதியும் அடைந்து நிச்சலன மோனத்தில் அமிழும்போது நம் அகக்கமலம் விரிந்து அருள் மணங் கமழ அருட்புலன்கள் உதயமாகின்றன. அப்போது நமக்கு அருட்காட்சிகள் தோன்றுகின்றன. ஆனந்தப்பரவச உணர்வு உண்டாகின்றது. இடைவிடாது ஓமெனும் அருளொலி கேட்கின்றது. வாழ்வின் உண்மைகள் யாவும் தெளிவாகின்றன. அலையற்ற கடல்போல் மனம் அமைதியுறுகின்றது. கடல்மடை திறந்ததைப்போல் அருளமுத வெள்ளம் பிரவாகமாக பாய்ந்து நம்முள் நிரம்புகின்றது. தெய்வீக அறிவெனும் விஞ்ஞான சூரியனின் அருளுதயக் காக்ஷிகள் தோன்றுகின்றன. முடிவில் யாவற்றிற்கும் மூலமானதும் ஆதியும் அந்தமும் இல்லாததும் அருட்பெருஞ் சுடரும் அகண்டானந்தமோன சொரூபியுமாகிய பரம்

பொருளை சாட்சாத்கரித்து தானெனும் தனியுணர்வு அற்று அதனுடன் இரண்டறக்கலந்தொன்றி பிறவாப்பெரு நிலையை அடைகிறோம்.

* * *

அனைத்திற்கும் ஊற்றும் உறைவிடமும் ஓங்காரமே யாகும். கடலில் இயல்பாக அலைகள் தோன்றி இயங்குவதே போன்று, யாவும் ஓங்கார மென்னும் பரநாதம் எழும்பும் பரிவுணர்வினின்றே தோன்றி இயங்குகின்றன. ஸ்தூல பிராண மனவுணர்வு நிலைகளைக் கடந்து பரவசமோன சமாதியிலாழ்ந்த மாபெரும் முனிவர்கள் பரவுணர்வினின் றும் எழும்பிய அருளொலியையே தங்கள் அருளுணர்வால் அருட்புலனால் கிரகித்து வேதம் உபநிடதம் கீதை பிரம்ம சூத்திரம் ஞானவாசிட்டம் போன்ற அருமறைகளாக ஆர்த்து உலகுக்கு அருளியுள்ளனர்.

* * *

விண்ணிற் சுழன்று ஒளிபரப்பும் செங்கதிரோன் இல்லா விட்டால் எப்படி ஒரு நொடியில் இப்புவியும் அதில் வாழும் உயிரினங்களும் அண்டகோளங்களும் குளிர்ந்து செயலிழந்துவிடுமோ அதுபோலவே ஓங்கார ஒலி எழும் பும் பரிவுணர்வு இல்லாவிட்டால் இவ்விஸ்வப் பிரபஞ்ச மும் விண் மீனும் செங்கதிரும் தண்மதியும் நீள்விசும்பும் ஒன்று மில்லாப் பாழ்வெளியாக ஆகிவிடும்.

* * *

பூரணம் பிரஞ்ஞையுடனும் பொலிவுடனும் ஒளியுட னும் பேராற்றல் உடையதுமான உணர்வுப் பொரு ளொன்று உள்ளது. அதனின்றே இடைவிடாது ஓமெனும் பேரொலி எழும்பி எங்கும் பரவி இன்பப் பரவசத்திலாழ்த் திக்கொண்டிருக்கின்றது. சத்து சித்து ஆனந்த உணர்வுநிலை களைத் தன்னகத்தே கொண்ட அப்பரம்பொருளையே ஓம் என்றும் ஓங்காரமென்னும் பிரணவ சொரூபமென்றும் பரநாதமென்றும் அருளொலி என்றும் நாதப் பிரம்ம மென்றும் பரிமோன அகண்ட பெருவெளி என்றும் மறை யோர்கள் போற்றி பிறவிப் பயனடைந்து வருகின்றனர்.

* * *

உடலுணர்ச்சிகள் புலனுகர்வுகள் விஷயபோகங்கள் பிராணசேஷ்டைகள் மனோவிகாரங்கள் எண்ணச் சுழல்கள் சிந்தனைத்திரள்கள் சித்தவிருத்திகள் ஆசாபாசங்கள் நான், என் எனது என்னும் அகந்தைத் தனி உணர்வு நான் வேறு அவன் வேறு என்னும் பேதபாவம் காமம், பயம், சினம், லோபம் நைப்பாசை விருப்பு வெறுப்பு முதலிய கீழியல் குணங்களினின்றும் முற்றும் விடுபட்டு தூய்மையும் அமைதியும் சமபாவமும் அடைந்து நிச்சலன நிலையில் பரிமோனப் பெருநிலையில் ஆழும்போது ஓங்கார சொரூபியாகிய பரம் பொருளைத் தவிர வேறொன்றையுங் காணமாட்டோம்? அழியாத் அமரத்துவம் அளிக்கும் பரிநாதத்தைத் தவிர வேறொன்றையுங் கேட்கமாட்டோம். எல்லாம் அதுவே. அதுவே எல்லாம். அதற்கு அன்னியமாக இங்கும் அங்கும் எங்கும் ஒன்றுமில்லை என்னும் பவித்ரமான வேதமந்திரங்களின் உட்பொருளை அனுபவ வாயிலாக உணருவோம். இரவில் செங்கதிரோனைக் காணமுடியாததைப்போல அஞ்ஞான நிலையில் அமரத்வமளிக்கும் ஓங்கார நாதத்தை கேட்கமுடியாது. மெய்ஞ்ஞான நிலையில் ஓங்காரத்திற்கு மூலமாகிய பரம்பொருளை தரிசிக்கவும் அதுவே நாம் என்பதை உணர்ந்து அதனுடன் இரண்டறக் கலந்தொன்றி ஆனந்தமோன அகண்ட பரிபூரணப் பரிவுணர்வில் வசித்து அருளமுத ஒளிக்கடலில் மூழ்கி பிறப்பிறப்பின் பேய்ச்சுழலினின்றும் விடுபட்டு அழியாத அமரத்துவ நிலையை அடைந்து நிரந்தரம் பேரின்பக்களிப்பில் திளைப்போம்.

* * *

நம்முடைய இடைவிடா முயற்சியினாலும் தீவிர சாதனையினாலும் சத்குருவின் கருணைகடாட்சத்தினாலும் இறைவனுடைய பேரருளினாலும் அகண்டமகாசத்தியின் திருஅவதாரமாகிய தெய்வீக அன்னையின் திவ்யப் பிரேமையினாலும் நமதுள்ளக் தூய்மையும் அமைதியுமுற்று நிச்சலன மோனத்தில் அமிழும் போது எப்போதும் எந்நிலையிலும் பரம்பொருளை தரிசிப்போம். அதன் அருட்காட்சிகளைக்காண்போம்.

(வளரும்)

உயர்ந்த கருத்துக்கள் எல்லாப்பக்கங்களிலிருந்தும் சேரட்டும்.
[இருக்கு வேதம்: 1-89-1]

## பவான் நூலகக் கல்லூரி

தொகுப்பாசிரியர்கள்:
ஸ்ரீ. கே. எம். முன்ஷி—ஸ்ரீ. ஆர். ஆர். திவகார்

## முன்னுரை

இந்நூலில் 108 கதைகள் அடங்கியுள்ளன. மிகுதியான கதைகள் சுவாமி ராமதாசர் அவர்கள் கேட்டதும் படித்ததும். இத்தொகுதியில் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர், ஸ்ரீ ரமணமகரிஷி இன்னும் பாரத பூமியில் உள்ள பரம ஞானிகள், மற்றும் பல்வேறு நாடுகளிலுள்ள ஞானிகள் அருளிய அருளுரைகள் அடங்கி இருப்பதனை வாசகர்கள் கவனிப்பார்கள்.

இத்தொகுதி ஒரு பூரணத்துவம் நிறைந்ததெனக் கூறமுடியாது. ஆனால் ஆத்மவிடுதலை வேண்டி அவ்வழி நாடுபவனுக்கு இக்கதைகள் உண்மையான ஒருதூண்டு சுடராகவும் தெளிவுக்கருவூலமாகவும் உதவும்.

1962. ராமதாஸ்.

### சுவாமி ராமதாஸ் அருளுரைகள்: — 2

## நவீன துர்வாசனை நல்வழிப்படுத்தல்

(தமிழாக்கம்: ம. சி. சிதம்பரப்பிள்ளை)

ஒரு சாது எந்த வகுப்பினனானாலும், அல்லது எந்தச் சமயத்தினனானாலும், அல்லது மாறுபட்ட சமயக் கோட்பாடுள்ளவனானாலும், அவர் ஒரு சாதுவானால், ஆனந்தாச்ரமம் அச்சாதுவுக்கு எந்நாளும் வரவேற்பளிக்கும். ஆச்சிரமத்தில் தர்மசாலையில் இவ்வாறான சாதுக்களிடையே மல்லுச் சண்டைகளும் நடைபெறும். ஒரு சாது மற்றச் சாதுவைப்

பார்த்து ''என்னைத் தீண்டாதே! தூர நில்! நீ இழிந்த வகுப்பினன்! எனக்கண்மையில் எவ்விதம் நீ இருக்க முடியும்? எனது சாப்பாட்டு இலையை ஏன் தீண்டினாய் எமது சாப்பாட்டு இலையைத் தீண்டியபடியினால் தீட்டுப் பட்டுவிட்டது'' என்று இவ்வாறுகச் சீறிப்பொருமுவார்கள்.

ஒருமுறை ஒரு சாது ஒருவர் எங்கள் ஆச்சிரமத்துக்கு வந்தார். எல்லோரும் பொதுவாகக் குழுமி உணவு உண்ணும் பொதுச்சாலையில் இவர் சென்று உணவு கொள்ள விரும்பவில்லை. ஆகவே உணவு சமைத்து சாப்பிடுவதற்கு ஒழுங்குகள் செய்யவிருப்பம் தெரிவித்தார். சமைப்பதற்குத் தேவையான அரிசி, பருப்பு, நெய், கோதுமை மாவு, மரக்கறிகள் முதலியனவற்றைப் பெற்றுச் சமைத்துச் சாப்பிட்டார்.

ஒரு நாள் தண்ணீர் மொண்டு வைப்பதற்கு ஆச்சிரமத்துக்குரிய ஒரு வாளியை எடுத்துக் கொண்டார். தண்ணீர் எடுத்துக் குடிப்பதற்கு ஒரு ''லோட்டா''(செம்பு)ஒன்றும் வைத்துக் கொண்டார். வாளியிலும் அரைவாசிக்கு நிறைத்து தன்னருகிலேயே வைத்துக் கொண்டார். அதற்கருகில் வாழை இலையில் தனது சாப்பாட்டை எடுத்து வைத்து உட்கார்ந்து உண்ண ஆரம்பித்தார்.

அதே சமயம் ஆச்சிரமஊழியப் பெண் வாளியைத்தேடி வந்தாள். ஆச்சிரமத்துக்குச் சொந்தமான சட்டி பானை கழுவுவதற்கு தண்ணீர் எடுப்பதற்குப் பாவிக்கும் வாளியைத்தான் சாது எடுத்துள்ளார். ஆகவே அதனை எடுப்பதற்கு அதனருகே சென்று எடுக்க எத்தனிக்கவும், சாது உடனே அலறும் தொனியில் கத்தினார். ''எனது வாளியைத் தீண்ட உனக்கு எவ்வாறு தைரியம் வந்ததடி! இந்த இடம் முழுவதையும் தீட்டாக்கிவிட்டாயே? இனி இந்த உணவையும் என்னால் சாப்பிடமுடியாதே'' என்றார்.

சாது ஒரு மிருகமாக மாறி அப்பெண்ணைச் சபித்தார். அவள்மீது வசைமாரி பொழிந்தார். அவர் போட்ட சத்தம்

எங்களுக்கும் ஆச்சிரமத்தில் கேட்டது, அடக்க முடியாத கோபாவேசத்தில் அங்கும் இங்கும் பாய்ந்து பாய்ந்து தனது கோப அனலைக் கக்கினார். அப்பாவிப் பெண்ணினால் சாது முன் நிற்க முடியாமல் மாதாஜி முன் ஓடி வந்து தஞ்சம் புகுந்தாள். ஒரு நொடிப் பொழுதில் வேறொருவர் மாதாஜியிடம் முறையிட்டார். ''அந்தச் சாது தான் சமைத்த அவ்வளவு உணவையும், இலையையும் நாய்க்கு முன்பாக வீசிவிட்டார். இன்னும் அலட்டிக்கொண்டும் ஆவேசமாகவும் காணப்படுகின்றார். ஒருவரும் அவருக்கண்மையில் போக முடியாமல் இருக்கின்றது'' என்று கூறினார்.

இந்தச் சாது உருவத்தில் குட்டை. ஆனால் உடலால் பருத்தவர். பயங்கரமான தோற்றமுடையவர். சிறிது நரைத்த தாடியுமுண்டு. பின்னப்பட்ட சடாமுடி. சாது கோபாக்கினியில் சிக்குண்டு தவிப்பதனை தூரத்தில் நின்ற வண்ணம், ஒருகணம் கவனித்தபடி மாதாஜி நின்றார். இக்கால துர்வாசன் போன்ற காட்சியை அச்சாது நினைவூட்டினார். இவரது இறுமாப்பையும் கோபத்தையும் தணிப்பதற்கு மாற்று மருந்து கொடுத்தாகவேண்டும் எனத்தீர்மானித்தார். சமயலறைச்சாலைக்குச்சென்றார். நல்லவெள்ளரிப் பழம் இருந்தது. அதனை நேர்த்தியாகத் துண்டாடினார். பல வகை வாழைக் கனிகளையும் எடுத்தார். இரண்டு இளநீர் (தேங்காய்) எடுத்தார். இவைகளை எல்லாம் ஒரு தட்டில் வைத்து ஒரு ஊழியன்மூலம் சாதுவுக்கு அனுப்பிவைத்தார். மாதாஜியும் அந்த ஊழியனைப் பின் தொடர்ந்து சாது இருந்த இடத்திற்குச் சென்றார்.

செந்நிற வெள்ளரிக்காயையும் தித்திக்கும் பழங்களையும், மாதாஜியையும் கண்டதும் கண்களிரண்டிலும் கனன்ற கனற்பொறிகள் சிறிது சிறிதாகப் புனலாக மாறியது. ''ஆச்சிரமப் பெண் பிழை செய்துவிட்டாள். ஆனால் அது தவறுதலாக நேர்ந்துவிட்டது. இந்தப் பழங்களை இப்போது சாப்பிடும்'' என்று மாதாஜி கூறி ஒரு குவளை நிறையத் தித்திக்கும் சூடான பாலையும் கொடுத்தார். சாது உடனே நிலத்

தில் சப்பாணி கொட்டினர். பழங்களிலும் பாலிலும் அரைவாசிக்கு மேல் அருந்தி முடியவும், சாதுவைப் பிடித்த அலட்டலும் ஆட்டமும் தணிந்து பழைய நிலைக்கு சாது சாதுவாகிவிட்டார்.

சீறும் சிங்கங்களையும் சிரிக்கவைக்கும் திறமை மாதாஜியிடமுண்டு. எல்லாப் பழங்களும், குவளை நிறைந்த தீம்பாலும் தொண்டைக்குள்ளாகச் சென்று வயிறு நிறையவும் இலேசாகச் சாது ஒரு புன்முறுவலை உதிர்த்தார். இப்போது சாது பூரணமான சந்தோஷமடைந்துவிட்டார். மாதாஜி சாதுவை நோக்கி, ''எப்படி இப்போது இருக்கின்றீர்கள்?'' எனக் கேட்டார். ''மிகவும் சந்தோஷம் மாதாஜி!'' எனக் கூறினர்.

சாது ஆச்சிரமம் எங்கும் சென்று மாதாஜி பரம காருண்யம் நிறைந்தவர், அன்னை தந்த பழமும் பாலும் எனது அகத்தையும் புறத்தையும் குளிரச் செய்துவிட்டது. யான் என்றும் நன்றியுள்ளவனக வாழ்வேன்'' எனக்கூறினர்.

மாதாஜி வாழ்க! சுவாமி ராமதாஸ் வாழ்க!
எங்கும் இன்பமே சூழ்க!

அடுத்த இதழில்: "நல்லதை இன்றே செய்" - 3

---

## பஞ்ச தந்திரம்

காயம் (உடல்) அபாயத்தைக் கொண்டது. பாக்கியமோ அபாக்கியத்தின் புகழையே பாடுகிறது. சேர்க்கைக்குப் பிரிவு நிச்சயம் உண்டு. பிறப்பு உள்ள எல்லாவற்றுக்கும் இறப்பு உண்டு.

பல், கேசம், நகம், மனிதர்கள்—ஆகியோர், தங்கள் இருக்குமிடங்களிலிருந்து பெயர்ந்தால் சோபிக்கமாட்டார்கள்! ஆகவே மதிப்பு உடையவன் தன் இருப்பிடத்தைத் துறந்து வெளியேறக்கூடாது.

# கதிர்காம மகிமை

(இராஜராஜேஸ்வரி - கணேசலிங்கம்)

"பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரண அற்புத மலர் தலைக்கணிவோமே"
"நாத ஒளியே நற்குணசிலா
நாரி இருவோரைப் புணர்வேலா
சோதி சிவஞானக் குமரேசா
தோமில் கதிர்காமப் பெருமாளே."

## 1. கதிர்காமத்தலப்பெயர்க் காரணமும் சிறப்பும்

"கதிர்" என்னும் சொல்லுக்கு "ஒளி" என்பது பொருள். கதிர்காமம் கதிரைமலை என்பன முருகவேள் ஒளியாய் விளங்கி விரும்பி வீற்றிருக்கும் தலம், மலை எனப்பொருள்படும். "காமம்" என்னும் சொல்லுக்கு "அன்பு" "விருப்பம்" "காதல்", "இன்பம்" என்னும் பொருள்கள் உண்டு. "விரும்பப்படுபவன்" எனப் பொருள்படும். "வேள்" என்னும் மறுநாமம் உடையவன் என்றும் இளமை அழகு திகழும் முருகன், ஒளியாய் விளங்கும் முருகன் அடியவர் விரும்ப எழுந்தருளியிருக்கும் தலம் கதிர்காமம் எனவும் கொள்ளலாம். இரும்பைக் காந்தம் இழுக்கின்றவாறொப்ப அடியாரைத் தன்பால் ஈர்த்து, அன்பைப் பெருக்கி, ஆண்டருளி, அவர் காமுறும் வரம் யாவும் தருகின்றான் அருள் ஒளி உருவினனை முருகப்பெருமான். வள்ளி நாச்சியாரிடத்து—பக்குவான்மாவை ஈடேற்றுவதில் தணியாத காதல் கொண்டவன் தண்ணொளி வடிவுடைய சரவணபவன். இக்காரணங்களால் கந்தக் கடவுள் "கதிர்காமன்;" அடியவர்க்கெல்லாம் அன்பை—ஆரா விருப்பத்தை விளைவிக்கும் அவனது தலமும் "கதிர்காமம்" எனக்கொள்வதும் பொருத்தம் ஆகவே தோன்றுகிறது.

''மேதரு குறத்தி திரு வேளைக்கார'' முருகனை, ''கதிர் செய் மாநகரியிற் கடவுள் ஆயக்காரன்'' எனத் துதிக்கும் அருணகிரிநாதர், கதிர்காமத்தை "ஒளிநகரம்'' எனப் புகழ்வதோடு, அந்நகரில், தேவர் கூட்டம் வழிபடக் கந்தப் பெருமான் கொலுவிருப்பதைக் கூறிக் கதிர்காமம் கந்தராஜ தானி என்பதையும் நமக்கு அறிவுறுத்துகிறார்.

''சுடர்ப்பரிதி ஒளிப்ப, நிலவு ஒழுக்கும் மதி ஒளிப்ப, அலை அடக்கு தழல் ஒளிப்ப ஒளிர் ஒளிப் பிரபை வீசும் கந்தன் கைவேலும் ''கதிர்வேல்'' கந்தராஜதானியும் கதிர் காமம்.

கதிர்காமத்தில் விக்கிரகமோ வேல் போன்ற வேறு அருட்குறியோ எதுவும் இல்லை. இங்கு தன்னை வணங்க வரும் பக்த கோடிகளுக்குக் கர்ப்பூர ஒளியாகவே காட்சி தருகின்றான் முருகன். கதிர்காமத்தில் கர்ப்பூர ஒளி காண்டலே முருக தரிசனம். ''கதிரைமலை காணாத கண் என்ன கண்ணே, கர்ப்பூர ஒளி காணாக் கண் என்ன கண்ணே,'' என்று கதிரைத் தலத்தில் கர்ப்பூர ஒளி காண்பதாகிய முருக தரிசனமே கண்படைத்த பயன் என அறுதியிட்டுரைக்கிறார் நவாலியூர் சோமசுந்தரப் புலவர். சோதிப் பிழம்பாய் விழங்கும் முருகனது ஒளி வடிவமே இங்கு வணங்கப்பட்டு வருவதே கதிர்காமம் என்னும் இத்தலப் பெயருக்குக் காரணம். வடமொழி ஸ்காந்த புராணத்தின் ஓர் பாகமாகக் கூறப்படும் ''(1) தக்ஷிண கைலாச மான்மிய''த்தில் கதிரைமலைக்கு "ஜோதிஷ்காமகிரி" என்னும் மறு பெயர் காணப்படுதலும் "கதிர்'' என்னும் சொல்லுக்கு "ஒளி'' என்ற பொருள் கொள்வதே பொருத்தமும் சிறப்புமாகும் என்பதைக் காட்டுகிறது.

---

1. வடமொழிச் சுலோகத்தில் யாக்கப்பட்ட நூல். அதன்மொழி பெயர்ப்பாக வதிரிவித்வான் திரு. சி. நாகலிங்கம்பிள்ளை அவர்கள் கி. பி. 1928ம் ஆண்டுவெளியிட்ட பிரசுரத்தில் காணப்படுவனவே இக்கட்டுரையில் ''தக்ஷிணகைலாயமான்மியம்'' கூறுவனவாகச் சொல்லப்படும் விஷயங்கள்.

"நக்கீரர், அருணகிரிநாதர்முதலிய அனுபூதித்தொண்டர்களும் முருகவேள் அடியார்க்கு (2) ஒளியாய்க் காட்சி தரும் அருட்சிறப்பை விசேடித்துக் கூறுவர். ஆகவே, பண்டைக் காலந்தொட்டு முருகன் குன்ருய் விளங்கும் கதிர் காமகிரி ஜோதிஷ்காமகிரி என்னும் பெயரால் பண்டை நூல்களில் கூறப்பட்டது. இதனுலே தான் புறச் சமயத்தவரும் இக்குன்றில் முருகன் ஒளிப் பிழம்பாய் விளங்கும் காட்சியைத் தங்கள் தங்கள் சமயக் கடவுளர் மேல் ஏற்றிக் கூறுவர். புத்த பகவான் போதி ஞானம் பெற்றபின் இலங்கைக்கு வந்து தியானத்திலிருந்த பத்து இடங்களுள் கதிர்காமமும் ஒன்று எனச் சிங்களரது பௌத்த சமயநூல்கள் கூறும். இஸ்லாம் மதத்தினர் தங்கள் "நபி" காண்டற்கு இனிய பச்சை ஒளியாய்க் கதிர்காமத்திற் காட்சி கொடுப்பதாகிய ஓர் அநுபவத்தைச் சொல்லிச் சொல்லி அங்கு வணங்குவர்." என்கிறது (3) "கதிரைமலைப் பள்ளு" ஆராய்ச்சியுரை.

இக்கூற்று, "பகர்வரிய தில்லை மன்றுள் பார்த்தபோது அங்கு, என்மார்க்கம் இருக்குது? எல்லாம் வெளியே என்ன, எச்சமயத்தவர்களும் வந்திறைஞ்சா நிற்பர்." எனத் தாயுமான சுவாமிகள் சிதம்பர ரகசியத்தைப் பற்றிக் கூறியருளியுள்ளதை நினைவூட்டுகிறது.

## 2. கதிர்காம இரகசியம்

கதிர்காம மூலஸ்தானம் என்றும் எவரும் காணுத இரகசியம். "ஆராரும் அறியாத சூதானவெளி" என்பதும்,

2. இங்கு குறிக்கப்படுவது பக்தகோடிகள் காணும் கர்ப்பூர ஒளி போன்ற பிராகிருதஒளி அல்ல; அநுபூதிமான்கள் அகக்கண்ணுற் காணும் அப்பிராகிருத ஒளி. பிரகிருதிதத்துவத்தைச் சேர்ந்தது பிராகிருதம்; பிரகிருதிக்கு அப்பாற்பட்டது அப்பிராகிருதம்.

3. "கதிரைமலைப் பள்ளு" திரு. வ. குமாரசுவாமி அவர்கள் பதிப்பு (1935) கதிர்காமக்ஷேத்திரச் சிறப்பு: கதிர்காமமும் புராணஇதிகாசங்களும்: பக்கம் 17, வரி 14 முதல் பக். 18 வரி 8 வரை.

அந்த இரகசியத்தில், ஏழு திரைகளுக்கு அப்பால், கதிர்காம நாதன் சொரூப நிலையில் (4)சிற்பர வெளியில் மோனபீடத்தில் ஞானப் பேரொளியாக எழுந்தருளியுள்ளான் என்பதும், அடிப்பட்ட ஆன்றோர், ஆப்தர்கள் வாயிலாக, வழி வழியாக, கர்ண பரம்பரையாக, பண்டு முதல் நமது தலைமுறை வரை வழங்கிவரும் ஒரு சம்பிரதாயம். இறைவனது சொரூப இலக்கணம் மனவாக்குகளுக்கு எட்டாதது. ஆயினும் கதிர்காமத்தைக் குறித்துத் தொன்று தொட்டு வழங்கி வந்த ஐதிகங்கள் சில முருகனது சொரூப நிலையினையும் மக்களுக்கு ஒருவாறு கோடிகாட்டுவனவாக அமைந்திருந்தன.

''கதிர்காம ஆலயத்தில் ஒன்றுக்குப்பின் ஒன்றாக ஏழு திரைகள் உண்டு. வெளிப்புறத்து முதல் திரையைத் தானும் நீக்கி உட்புகும் உரிமை அணுக்க வழிபாடுசெய்யும் கப்புறுளைமாருக்கு மட்டுமே உண்டு. அவர்களுக்குக்கூட அடுத்த இரண்டாம் திரையைத் தானும் விலக்கி உட்புகும் அதிகாரம் கிடையாது. ஏழு திரைகளையும் விலக்கி உட்புகுந்தால்தான் ஏழுதிரைகளுக்கும் அப்பால் உள்ள "மூலஸ்தானம்'' ஆகிய ''கதிர்காம இரகசியத்தை'' அறியலாம்; கந்தவேளை நேரில் காணலாம். முருகன் அநுமதி பெற்று இரண்டாந் திரையையும் விலக்கி உட்புகுந்தோர் (5)எவருமே இல்லை.

---

4. கதிர்காமம் ''தானவர் குலம் அழிந்து வானவர்க்குப் பேறளித்த ஐயனார் விரும்பி உறையும் அந்தராகாச அருந்தலம்.''–கதிர்காம மகத்துவம்'' ''கதிர்காம யாத்திரை''. ''மூலஸ்தானத்திலே இரகசிய மோன பீடத்திலே தமது பூரணசாந்நித்தியத்துடனும் குகப்பிரமம் விளங்குகின்றது,'' –கதிர்காமச் சந்நதி: ''கதிர்காமயாத்திரை''– வண்ணை. நா. வை. தியாகராசா. (அந்தர + ஆகாசம்=அந்தராகாசம். தில்லைவெளி அந்தரர்காசம்.
காஞ்சியில் பில ஆகாசத்தில் காமாட்சி அம்பிகை அருவமாக எழுந்தருளியிருக்கிறாள், – [கட்டுரை ஆசிரியர் குறிப்பு]

5. இங்கே (–கதிர்காமமூலஸ்தானத்திலே) பிரமன், விஷ்ணு, இந்திரன் ஆதிய தேவர்களே பூசை முதலியன புரிந்து வருகின்றனர்.'' என்பது ஐதிகம்.

— கதிர்காமச் சந்நதி: "கதிர்காமயாத்திரை. – வண்ணை. நா. வை. தியாகராசா

''எப்போதாவது மூலஸ்தானத்துக்கு ஓடுமாற்ற அவசியம் நேர்ந்தால் பண்டைத் தவப்பயனுகைப் பக்குவ நிலையடைந்த ஒருவர்க்கு முருகனே கனவில் தோன்றி, ''நீ இன்ன நாளில் இங்கு மூலஸ்தானத்துக்கு ஓடு மாற்றும் பணியை மேற்கொண்டு செய்துவிட்டு, நம்பதத்தை அடைவாய்'' என்று அருள் ஆணை தருவன். அவ்விதமே கப்புருளைமாருக்கும் மற்றும் அன்பர்க்கும் கனவில் தோன்றி, ''இன்னூன் ஓடுமாற்றும் பணிக்கு உரியவன்; உரிய நாளும் இது; அப்பணிக்கு வேண்டும் உபகரணங்கள் தேடித்தருவதோடு, அப்பணி முடிந்ததும் நம்பதம் சேர்தற்கு உரியவனுகும். அவன் சமாதிக்குக் குழிவெட்டி, மற்றும் ஆகவேண்டியனவும் செய்மின்'' எனப்பணிப்பன். ஐயன் பணியைச் சிரமேற்கொண்ட அடியவர்கள் ஆலயத்தின் கூரையிலிருந்து நேரே குழியிற் குதிக்கும் வகையில் இடம் தேர்ந்து, சமாதிக் குழி அமைப்பார்கள். குறித்த நாளில் ஓடுமாற்றும் பணி முடிந்து கதிர்காம ரகசியத்தைக் கண்ட அன்பனும், அகத்தில் பொங்கிக் கரைபுரளும் ஆனந்தம் முகத்தில் புறம் பொசிய, அக்குழியிற் குதிக்க வருவான். குதிக்கு முன் அவனைச் சிறிது நிறுத்தி, அவன் கண்ட இரகசியம் என்னவென்று கேட்டறிய முயன்றுலும் (6) அவனுல் பதில் எதுவும் சொல்ல முடியாது; பேச்சு இழந்து நிற்பான். குழியிற் குதித்து அப்படியே சமாதியாகிவிடுவான்.

இவை, கிராமமக்கள் பலர் கூற, நான் சிறுவயதில் கேட்ட கதைகள். கதிர்காம யாத்திரை தொடங்குவதற்கே முருகனிடம் வரங்கிடந்து அருள்விடையை எதிர்பார்த்து ஏங்கிக் காத்திருந்த காலம் அது.

---

6. ''செப்போடிட்டதை மாத்தையிலே—பின்னும்
சீர்திருத்திவரி சாத்தையிலே
அப்போதங்குள்ள மூலஸ்தானத்தை
அறிந்து கொள்ளாரோ? சொல்லுமையா.'', என்று வினு எழுப்பி
''அறிந்ததுண்டையன் உத்தரவால்—பன்னி
ராண்டுக் கொருதரம் மாத்தினவர்
உரிய சுத்த மவுனங் கொண்டு சமா
துகந்தடைந்தவர் கோடியுண்டு'' என விடையாக இதுபற்றி விளங்கும் ஐதிகத்தைக் குறிப்பிடுகிறது கதிர்காமக் கும்மி. இக்கும்மி ஆசிரியர்: ''மன்னர் புகழ் ராமநாதபுரம் சேது, மாநகராம் திருப்புல்லாணி.

''நன்னயமாகிய ஊர் தாண்டி தங்கம், ராமசாமி யெந்தன் பேர் தாண்டி'', எனக் கும்மிப்பாட்டினுலேயே தம்மை அறிமுகப்படுத்திக்கொள்கிறுர். இப்படியாக ''கதிரேசன் பேரில் ஆனந்தக்களிப்பு'', ''கதிர்காமத்து ஏசல்'', ''கதிர்காமக் கும்மி'' மூன்றும் ஒரே புத்தகமாக 1947ல் வெளியிடப்பட்டன இரண்டாம் பதிப்பாக.

(தொடரும்)

# "முருகக் கனி"

(செல்வி. பாமா விஸ்வநாதன்—மதுரை)

முருகன் என்றோர் கனியுண்டு,
முதிர்ந்த ஞானச் சுவையுண்டு,
பெருமை என்றோர் கதுப்புடனே,
பேரொளி வீசிடும் விந்தையது.

கன்னற் சுவையும் கசந்திடுமக்
கனியின் பெயரைச் சொன்னாலே
இன்னல் நீக்கும் மருந்தாகும்
இன்பம் நல்கும் வித்தாகும்.

அறிவுப் பசியைப் போக்கிவிடும்,
ஆழ்ந்த உணர்வைத் தேக்கிவிடும்
செறிவு மிக்க கனியாகும்,
செருக்கை யடக்கும் கோலாகும்

கனியை உண்ண வாரீரோ,
கவலை நீங்கும் பாரீரோ,
கனியை உண்டால் குறைவதில்லை,
கனிந்து மேலும் சுவைகூட்டும்.

அன்பு என்னும் விதையுண்டு,
அருளே என்னும் சாறுண்டு,
என்பும் உருகும் உண்டிட்டால்,
எல்லாச் சுவையும் மறந்திடுவீர்.

கருமம் தொலைந்து இன்புற்றே,
கனியின் சாற்றில் கலந்திடுவீர்,
சாற்றில் கரைந்து கலந்திட்டால்,
சகல பொருளும் அதுவென்பீர்,
வீற்று இருப்பீர் சுகந்தனிலே,
விரைந்து அதனைப் பெற்றிடுவீர்.

# ஆயுள் சந்தாதாரர்களின் கவனத்திற்கு

25 ஆண்டுகால எல்லையை வைத்தே ஒரு பத்திரிகைக்கு ஆயுள் சந்தா நியமிப்பது மரபு. அதாவது ஒரு தலைமுறை சராசரி 25 ஆண்டுகள் வரை என்ற கணக்கில் அப்படி ஏற்பட்டது. ஆத்மஜோதி ஆரம்பித்த காலத்தில் வருடச் சந்தா 3 ரூபா ஆகும். ஆயுள் சந்தாவை 75 ரூபாவாக நியமித்திருந்தோம். அக்காலத்தில் ஒரு பத்திரிகை அனுப்பச் செலவு 3 சதம் மாத்திரமே. தற்போது காகித விலை, அச்சுக்கூலி, முத்திரைச்செலவு ஆதியன பல மடங்கு கூடியிருப்பதை எல்லோரும் அறிவீர்கள். ஆகவே 75 ரூபா அனுப்பி ஆரம்பத்திலே ஆயுள் சந்தா தாரராகச் சேர்ந்தவர்களுக்கு 28 ஆண்டுகள் சோதி ஒழுங்காக அனுப்பி வந்துள்ளோம். ஆகவே அந்த அன்பர்கள் தமது ஆயுள் சந்தாவைப் புதுப்பித்து சோதியின் வளர்ச்சிக்கு உதவுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகின்றோம். தங்கள் ஆயுள் சந்தாவுக்கு 29ஆவது ஆண்டுதொடக்கமாக 250 ரூபா செலுத்திச் சோதியின் வளர்ச்சிக்கு உதவுவீர்களாக. அன்பர்கள் காட்டும் ஆதரவுக்குத் தக்கதாக சோதியின் பக்கங்களைக் கூட்டி விஷயங்களை அதிகப்படுத்தவும் உத்தேசித்துள்ளோம்.

28 ஆண்டுகளாக சோதியைக் கண்ணுங் கருத்துமாக வளர்த்த சந்தா நேயர்கள் எதிர் காலத்திலும் வளர்ப்பார்கள் என்ற நம்பிக்கையில் இந்த வேண்டுகோளை உங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்.

இங்ஙனம்,
ஆத்மஜோதி நிர்வாகிகள்,

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி.
ஸ்ரீலங்கா.

Registered at the G. P. O. as a Newspaper M. L 359/00.

2,82
1,62
4,44

## சந்தா நேயர்களின் கவனத்திற்கு

அன்புடையீர்! அன்பு வணக்கம்.

ஆத்மஜோதிக்கு 28 ஆண்டுகள் பூர்த்தியாகின்றன என்ற நல்ல செய்தியை உங்களுக்கு நினைவூட்டுவதில் மகிழ்ச்சி கொள்ளுகின்றேன். கடந்த இரண்டு ஆண்டுகளாக இரு மாதங்களுக்கு ஒரு முறைதான் சோதியை வெளியிட முடிந்தது என்ற வருத்தங் கலந்த உண்மையையும் உங்கள் முன்னிலையில் வைக்கின்றேன்.

29ஆவது ஆண்டு தொடக்கம், அதாவது இவ்வாண்டு கார்த்திகை மாதம் தொடக்கம் மாதந்தோறும் ஆத்மஜோதி உங்கள் வீடுதேடி வரும் என்ற நற்செய்தியையும் அறியத் தருகின்றோம். பல அன்பர்கள் தங்கள் அபிப்பிராயங்களைக் கடிதமூலம் அறிவித்திருந்தார்கள். அவர்களுடைய அபிப்பிராயங்களை அப்படியே வெளியிடுவதானுல் அதற்கென்றே தனியொரு சோதி வெளியிட வேண்டிவரும்.

சில அன்பர்கள் ஆத்மஜோதி மாதம் இருமுறையாவது மலர வேண்டும் என்ற தமது அபிப்பிராயத்தை ஆணித் தரமாகக் கூறியதன் மூலம் மாதம் ஒரு முறையாவது கட்டாயம் வெளிவரச் செய்யவேண்டும் என்ற முடிவுக்கு வந்தோம். இறையருள் பாலிக்கும் போது மாதம் இருமுறை வெளிவரவேண்டும் என்ற அன்பர்களுடைய எண்ணங்களும் நிறைவேறலாம் என்பதை அன்புடன் அறியத் தருகின்றோம்.

புதிய ஆண்டில் உள்ள சந்தா மாற்றத்தை எல்லா அன்பர்களுடைய கவனத்திற்கும்கொண்டு வர விரும்புகின்றோம்.

| | | | |
|---|---|---|---|
| இலங்கைக்கு மாத்திரம் | வருடச் சந்தா | 10 | ரூபா |
| வெளிநாடுகளுக்கு | வருடச் சந்தா | 15 | ரூபா |
| ஆயுள் சந்தா | சந்தா | 250 | ரூபா |
| தனிப் பிரதி | | 1 | ரூபா |

ஆத்மஜோதி நிலையம்,
நாவலப்பிட்டி. (ஸ்ரீலங்கா.)

இங்ஙனம்
ஆத்மஜோதி நிர்வாகிகள்

அச்சிடுவிப்போர் :— ஆத்மஜோதி நிலையம்
அச்சிடுவோர் :— ஸ்ரீ ஆத்மஜோதி அச்சகத்தினர்.
வெளியிட்ட திகதி:— 15-11-76.